★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 35600

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 14௳ வெள்ளி (27—1—56) ★ ★ வெளியூர்: தை 15௳ சனி (28—1—56) [இதழ் 193

பண்டிதர் தந்த தீர்ப்பால் பூரியில் ஒரு கோடி ரூபாய் பாழ்!

கடந்த ஞாயிறன்று தீ வைக்கப்பட்ட பூரி இரயில் நிலையம் மற்றும் நாசமுற்ற சர்க்கார் சொத்துக்கள் இவற்றிற்கு ஏற்பட்ட சேதார மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நகரம் இப்போது சுடுகாட்டு அமைதியில் ஆழ்ந்திருக்கிறதாம். மக்கள் எல்லாம் இன்னும் தொங்கிய முகத்துடன்தான் இருக்கின்றனராம்.

ஆயுதந்தரித்த போலீசார் நகரில் இன்னும் ரோந்துவந்து கொண்டிருக்கின்றனராம்.

மராட்டியர் 'தன்மானம்' பறிக்கப்படுகிறது

அப்பளம்! அப்பளம்! சர்க்கார் முத்திரை அப்பளம்!

வெளி நாடுகளிலும் அப்பளத்தின் புகழ் அதிதீவிரமாகப் பரவுகிறதாம்

திருவல்லிக்கேணியில் உற்பத்திச்சாலை உருவாகிறது

மத்திய அரசாங்க மானியத்தில் சென்னையின் முற்போக்கு ஏற்பாடு

உளுந்து மாவினால் தயாரிக்கப்படும் அப்பளத்திற்கு புதிய யோகம் பிறந்திருக்கிறது!

அரசாங்க அடையாளம் பொறிக்கப்பட்ட அப்பளம் இனி தயாரிக்கப்பட்டு, வீடு வீடாக விநியோகிக்கும் ஏற்பாட்டை சென்னை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது!

அப்பளத்தை, புலால் புசிப்போரும், மரக்கறி உணவு உண்போரும் பெரிதும் விரும்பி உண்கிறார்கள் என்ற முடிவுக்கு நமது அரசாங்கம் வந்திருக்கிறது. அதுவுமன்றி, வெளி நாடுகளில் அப்பளத்திற்குப் புதிதாகக் கிராக்கி ஏற்பட்டு வருகிறது என்பதையும் நமது அரசாங்கம் உணரத் தொடங்கிவிட்டது!

அப்பளம் தயாரிப்பதை ஒரு குடிசைத் தொழிலாகக்கொண்டு, ஆதரவு காட்டி வளர்ச்சியுறச் செய்ய, இந்தியப் பேரரசு திட்டம் ஒன்று உருவாக்கி இருக்கிறது!

தென்னாட்டின் தொழில் ஏற்பாடாக, இந்த அப்பள உற்பத்திப் பெருக்கத் திட்டத்தை, இந்தியப் பேரரசு தனது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதற்கு இதுவரை விளக்கம் இல்லை. 'விளக்கம் தேவை' என சென்னை அரசாங்கம் வற்புறுத்தினால், அக்கோரிக்கைக்கு இணங்கவேண்டியதுதான் கடமை என இந்தியப் பேரரசு கருதினால், ஒருவேளை அப்பளத் தொழில் ஏற்பாட்டிற்கு விளக்கம் கிடைக்கக் கூடும்!

மத்திய அரசாங்கம் அப்பளத் தொழிலுக்கு அளிக்கும் மானியத் தொகையில், கூடிய விரைவில் சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு அப்பளத் தொழிற்சாலை நிர்மாணம் செய்ய சென்னை அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

திக்கற்ற விதவைகள், ஏழைப் பெண்கள், தொழிலைத் தேடி அலையும் பெண்கள், ஆகியவர்களுக்கு வேலைதரும் கருவூலமாக, அப்பளத் தொழில் இருக்கக் கூடுமென அரசாங்கம் நம்புகிறது.

தங்களுடைய ஓய்ந்த நேரத்தில் பெண்கள் ஈடுபடும் தொழி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

'ஆங்கிலம் அகற்றப் படக் கூடாது'

"இந்தியாவின் ஒரு பெரும் மொழியாகவிருக்கும் ஆங்கிலத்தை ஒழித்துவிடுவதென்பது கூடாது; ஆங்கிலம் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக, இந்தியாவை 'ஒற்றுமை'ப்படுத்தி வைத்திருக்கிறது; உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்குப் பெரும்பயனாக விளங்கியிருக்கிறது; எனவே ஆங்கிலம், சமஸ்கிருதம்… இந்தி ஆகிய மூன்றும் கட்டாய பாடமாகப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிலும் போதிக்கப்பட வேண்டும்.

"மாநில மொழிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியதுதான்; ஆனால், அவை, 'இந்திய ஒற்றுமை'யைச் சீர்குலைக்கும் வகையில் அவற்றையே நம்பியிருத்தல் கூடாது,"

என்று, தலைமை உயர்நீதி மன்ற முன்னாள் பிரதம நீதிபதி மேகர் சந்த் மகாஜன், கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாயில் அமைதி காக்க உத்திரப் பிரதேச போலீஸ்

5 பிரிவு ஆயுதப் போலீஸ் படை அனுப்பப்பட்டுள்ளது

இந்தியப் பேரரசின் புதிய கோலம்

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மராட்டிய மாகாணம் அமைக்க மறுத்து, பம்பாயைத் தனது நேரடி ஆட்சிக்குக் கொண்டுவர முனைந்த இந்தியப் பேரரசின் முடிவு கண்டு, மராட்டிய மக்கள் கொதித்தெழுந்தனர். ஒரு கிழமை வரையில் பம்பாய், புரட்சிப் புயலில் சிக்கித் தவித்தது.

கலகங்களை ஒடுக்க முடியாமல், காங்கிரஸ் ஆட்சி திக்குமுக்காடி விட்டது.

இப்பொழுது, பம்பாயில் அமைதியை நிலைநாட்டிப் பாதுகாப்பது என்ற போர்வையில், மராட்டிய மக்களின் உரிமைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு உத்திரப் பிரதேசத்திலிருந்து ஆயுதப் போலீஸ் படை அனுப்பப்படுகிறது.

இந்தியப் பேரரசின் ஆணையே இப்புதிய ஏற்பாட்டிற்குக் காரணமாம்!

பம்பாய் போலீஸ் துறையில் மராட்டிய மக்களே பெரிதும் பணிபுரிந்து வருகின்றனர். மராட்டியர்களை ஒடுக்க மராட்டியப் போலீஸ் படையினர் தயங்குகிறார்கள் என்ற எண்ணத்தின்மீதுதான், மராட்டியர்களை ஒடுக்க உத்திரப் பிரதேசத்திலிருந்து போலீஸ் படை அனுப்பப்படுகிறது என்றே ஐயுற வேண்டியதாக இருக்கிறது. இந்த ஐயப்பாட்டிற்கு இடமில்லையானால், உத்திரப் பிரதேசத்திலிருந்து ஐந்து பிரிவு ஆயுதம்பூண்ட போலீஸ் படையை பம்பாய் மாகாணத்திற்கு அனுப்பவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது.

பம்பாய் அரசாங்கத்தின் வேண்டுகோள்மீதுதான் இந்தியப் பேரரசு, உத்திரப் பிரதேசத்துப் போலீஸ் படையைப் பம்பாய்க்கு அனுப்பிவைக்க முன்வந்திருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

பம்பாயில் அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரால், தங்களுடைய உரிமையைக் குலைப்பதற்கே பம்பாய் அரசாங்கமும், இந்தியப் பேரரசும் கூட்டாகச் சதி செய்திருக்கிறது என்ற நினைப்பு மராட்டிய மக்களுக்கு ஏற்படுவது இயல்பேயாகும்.

தங்களுடைய தன்மானம் பறிக்கப்படுகிறது என்று மராட்டிய மக்கள் கருதுவதும் குற்றமுடையதாகாது

இதுகண்டு மராட்டிய மக்கள் சீற்றமடைவதும் எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

திருட்டுப்போன அரண்மனைக் கோவில் சொத்துக்கள்

இராஜஸ்தானில் சாது ஒருவர் கைது

கடந்த டிசம்பர் 16-ந் தேதி அன்று ஹோல்கார் அரண்மனைக் கோயிலிலிருந்துதங்கத் தொட்டில் விலையுயர்ந்த வலம்புரிச் சங்கு, மற்றும் சில பூசைப் பொருட்கள் சுமார் ரூ. 2 இலட்சம் பெறுமானவை திருட்டுப் போனது பற்றிச் செய்தி வந்தது அல்லவா?

இப்போது போலீசார், அதை ஒட்டி இராஜஸ்தானில் உள்ள சிகார் எனும் நகரில், சாது ஒருவர் அபூர்வமான ரக வலம்புரிச் சங்கு ஒன்றை வைத்திருப்பதாகக் கண்டு அவரைக் கைது செய்திருக்கின்றனராம்.

என்ன சுறுசுறுப்பு!

இந்தியாவில் உள்ள 316 மாவட்டத் தலைமைக் காரியாலயங்களுள் 306 காரியாலயங்களில் டெலிபோன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆண்டுதோறும் இந்தியாவில் 'மெட்ரிகுலேஷன்' வகுப்புதோறும் 3 இலட்சம் மாணவர்களுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவிகிதத்தினர்தான் மேல் படிப்பிற்காகக் கல்லூரிகளில் சேருகிறார்கள்.

ஓகோ! அப்படியா?

இந்தியப் பல்கலைக் கழகங்களிலிருந்து, இப்பொழுது ஆண்டு ஒன்றுக்கு 3,000 பேர் வீதம் 'எஞ்சினீயரிங்' பட்டம் பெற்று வருகின்றனர். 1950-ம் ஆண்டுக்கு முன்பு சுமார் 1,000 பேர் வீதமே இப்பட்டம் பெற்றுவந்தனர்.

யாருக்கு இலாபமோ?

கடற்கரையோர — வெளிநாட்டு வர்த்தகத்துக்கு வேண்டிய கப்பல்களை வாங்குவதற்காகக் கப்பல் கம்பெனிகளுக்கு, இதுவரை இந்திய சர்க்கார் ரூ. 20 கோடி கடன் வழங்கியிருக்கின்றனர்.

★★★★★★★★★★★★ ★ ★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக்குழுக் கூட்டம்

★

29—1—1956 ஞாயிறன்று காலை 10 மணிக்கு

சிதம்பரம் மாலைகட்டித் தெரு, சாதுகூடக் கட்டிடத்தில் நடைபெறும்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் முக்கியப் பொருள்கள்:

(1) மாநில மாநாடு

(2) கழகச் சட்டதிட்டம் திருத்தம் செய்தல்

(3) கொள்கை விளக்க நூல் வெளியிடுதல்

(4) மாநிலப் புது அமைப்புப் பற்றி முடிவெடுத்தல்

குறிப்பு: பார்வையாளர்களாக எவரும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு: வரவேற்புச் செயற்குழுக் கூட்டம்

★

29—1—56 ஞாயிறு மாலை 5 மணிக்கு

சிதம்பரம் மாலை கட்டித் தெரு, சாதுகூடக் கட்டிடத்தில்

நடைபெறும்

பொருள்: மாநில மாநாடு ஆக்க வேலைகள்

—எம். எஸ். மணி, செயலாளர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—1—'56 வெள்ளி

எச்சரிக்கையின் வெற்றி

இன்றுள்ள உலக அரசியல் தலைவர்களில், பற்பல காரணங்களால் உருவாக்கப்படும் உலகப் புகழ் ஒன்றை மட்டுமே நம்பி, அரசியலில் பங்கு கொண்டிருப்பவர்களில் நேரு பண்டிதருக்கு இணையாக எவரையும் கூறுவதற்கில்லை; அத்துறையில் அவருக்கிணை அவரேதான்.

இமை மூடித் திறப்பதற்குள் மணல் மேடு போல் சரிந்து விடக்கூடிய உலகப் புகழை மட்டுமே ஒரு பொருட்டாக மதித்து, உள் நாட்டு விவகாரங்களில் எதேச்சாதிகாரமாக நடந்துகொள்ளலாம் என அவர் திடநம்பிக்கை கொண்டிருக்கிறார் என்றஉண்மையை, நேருவின் சமீப காலப்போக்கு மெய்ப்பித்துவிட்டது. நீர்மேல் குமிழி போன்ற உலகப் புகழ் எவ்வளவு பெருமிதமாக ஒருவருக்கு இருந்தபோதிலும், உள்நாட்டு விவகாரங்களில் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நடக்கத் தவறினால், தனது வாயுரைக்கு உள்நாட்டில் அலட்சியமும் பிற நாடுகளில் சிரழிவும் தான் நிச்சியமாக ஏற்பட்டுத் தீரும் என்ற மகத்தான உண்மையை, சொந்த அனுபவத்தின் மூலம் இந்தியப் பிரதமர் நேரு உணரத் தொடங்கி இருக்கிறார். தேசியத் தொண்டர் படையினருக்குப் பண்டிதர் கூறிய அறிவுரை அவர் பெற்றுள்ள மனமாற்றத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

புதிய அனுபவத்தால் பெற்றுள்ள மனமாற்றம், எதிர் காலத்திலும் அருந்துணையாக இருக்குமா அல்லது தோன்றி மறையும் மின்னல்போல் இக்கால அளவோடு பிரதமரை விட்டுத் தொலைந்து போகுமா என்பது சிந்திக்கத் தக்கது. உண்மையான மனமாற்றந்தான் பெற்றிருக்கிறரா அல்லது மனமாற்றம் பெற்றவர் போல் வெறும் பாவனை செய்கிறரா என்ற இரண்டில், எந்த ஒன்றையும் உறுதியாகக் கூறுவதற்கில்லை. அரசியல் தலைவர்களின்—அதுவும்கட்டுப்பாடற்றதும்,தட்டிகேட்பாரற்றதுமான அதிகாரத்தை இந்தியப் பிரதமர்போல் கைக்கொண்டு இருப்பவர்கள், குறிப்பிட்ட ஒரு மனப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட பிறகு, மீண்டும் வேறு மாறுன மனப்போக்குப் பெறுவதென்பது முடியாத ஒன்றேயாகும்; அப்பண்பின் இயல்புக்கு, அது மாறுபட்டதுமாகும்.

மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து நடப்பதுதான் ஆட்சியாளர்களுடைய நீங்காக் கடமையாகும். மக்களாட்சியின் பெயர் கூறி ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளவர்கள் யாராக இருந்தாலும், மக்கள் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டே நடந்தாக வேண்டும். அத்தீர்ப்பு தனது கருத்துக்கு அரண் செய்வதாகவும் இருக்கக்கூடும்; முரண்படுவதாகவும் இருக்கக்கூடும். சாதகமான—அல்லது பாதகமான எதுவாக இருந்தாலும், மக்களாட்சியில், மக்களின் முடிவிற்குக் கட்டுப்பட்டு நடந்தால்தான், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் ஆணைக்குஅல்லது போதனைக்கு எதிர்பார்க்கப்படும் மக்களிடமிருந்து மதிப்பும் ஆதரவும் அபரிமிதமாகக் கிடைக்கக் கூடும்.

மக்கள் முடிவை மதித்து நடக்க ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் மறந்துவிடுவார்களேயானல், அவர்களிடும் கட்டளையையும் மக்கள் மதித்து நடக்க மறுத்துவிடுவர். இது உலகப் பொது விதி. இப்பொது விதியிலிருந்து தப்ப, காதொடிந்த ஊசி அளவிற்கும் பயனளிக்காது உலகப் புகழை அமோகமாக சேமித்து வைத்துள்ளதாக நம்பிக் கிடக்கும் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதராலும் ஒருக்காலும் முடியாது. இப்பெரும் உண்மையைத்தான் பம்பாய்க் கலவரங்களும், கட்டாக் குழப்பங்களும் அறிவுறுத்துகின்றன.

'மக்களின் முடிவை மதித்து நட—மக்களின் குரலை அலட்சியஞ் செய்யாதே' என்ற போதனையைத்தான் பம்பாய்—கட்டாக் பயங்கரச் சம்பவங்கள் இந்தியப் பிரதமருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. அது கண்டு பிரதமர் கலக்கமடைந்துள்ளார் என்பதை, அவருடைய சொற்பொழிவு எடுத்துக் காட்டுகிறது.

'என் முடிவே இறுதியானது! இதை எதன் பொருட்டும் மாற்ற முடியாது' என இறுமாந்து கூறிய இந்தியப் பிரதமர், கொஞ்சம் ஈனக் குரலிலும் பேசத் தொடங்கி இருக்கிறர். அவர் பேச்சு குறித்து பிறகு ஆராய்வோம்.

உலகப் புகழில் தன்னை மறந்து நடந்து கொண்டுவந்த இந்தியப்பிரதமருக்கு, பம்பாய், கட்டாக் சம்பவங்கள் விழிப்பூட்டி இருக்கின்றன. அது வகையில் மக்களின் முயற்சி வெற்றிபெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதேயாகும்.

அணு சக்தியால் இயங்கும்

அமெரிக்க நீர்மூழ்கி

அணு சக்தியால் இயங்கும் 'நாட்டிலஸ்' எனப்படும் முதல் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல், இந்த முதல் ஆண்டில் சராசரி தினம் ஒன்றுக்கு ஒரு முறை தண்ணீருக்குள் போயிருக்கின்றது; 26,231 மைல்கள் கடலில் பிரயாணம் செய்திருக்கிறது.

இடையில் எரி பொருள் போடாமல், அது 75 முறை பிரயாணம் செய்த மொத்தத் தூரமான 26,231 மைல்களில் பாதி தூரத்திற்கு மேல் தண்ணீருக்குள்ளேயே மூழ்கிச் சென்றதாம்.

மேலும் அக்கப்பல், 206 மணி நேரம் நிற்காமல் ஓடிய்த என்றும், மேலே வராமல் 89 நாள் 14 கி.மீ.ம் பிரயாணம் செய்தது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தற்போது இதுபோன்ற மற்றிரண்டு நீர்மூழ்கிகள் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதாம். மேலும் சில கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

மதச் சடங்குகளை நடத்துவிக்கும் 'புரோகிதைகள்'

புதுடில்லி, ஜன. 26—

கல்யாணம் முதல் கருமாதி வரையில் நடத்திவைக்கும் 'புரோகிதை'கள், ஒரிசாவில் உள்ள துணபூர் மலையில் இருக்கின்றனராம்.

இந்த மலைச் சாதியினருக்கு சோரா'க்கள் எனப் பெயராம.

குழந்தைகளைப் பெற்றெடுப்பவர் பெண்களே என்பதால், மத சம்பந்தமான சடங்குகளையும் பெண்களே நடத்தவேண்டும் என இவர்கள் நோக்கம் கொண்டுள்ளனராம்.

இந்திய மனித வர்க்கம் பற்றிய சர்க்கார் அறிக்கையில் இந்தத் தகவல்கள் காணக் கிடக்கின்றன

இறந்தவர்களின் சடலங்களைப் பெண்களே இடுகாட்டிற்குத் தூக்கிச் சென்று, பிணங்களைக் குளிப்பாட்டுவது முதல் எல்லா இறுதிச் சடங்குகளையும அவர்களே செய்கின்றனராம் ஆண்கள் இதிலகலந்து கொள்வதே இல்லையாம்; பூசைகளை இவர்களே நடத்துகின்றனராம்.

ஆண்கள் மதக் குருக்களாவதை இவர்கள் எதிர்பார்ப்பதில்லை என்றும், ஆண் குருக்கள் வெகு சிலரே இந்தச் சாதியில் இருப்பதாயும், ஒரு கிராமத்தின் தலைமைப் பொறுப்பில்கூட ஒரு பெண் இருப்பதாயும் கூறப்படுகிறது.

தென்பகுதி இரயில்வேஅபிவிருத்தி

மந்திரி பக்தவத்சலம் தகவல்

சென்னை, ஜன. 25—

தென்பகுதியில் புதிய திட்டம் எதுவும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்றால், மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் அது குறித்து வற்புறுத்தும் என்று மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

'தென்பகுதி இரயில்வேயில் புதிய திட்டம் எதையும் எடுத்துக் கொள்வதில்லை என்று மத்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாக மாநில சர்க்காருக்குத் தெரியாது' என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

தென்பகுதி இரயில்வே பிரதேசத்தில் மிக அத்தியாவசியமாகப் புதிய பாதைகள் அமைக்க வேண்டியதை மட்டுமே சென்னை சர்க்கார் தங்கள் திட்டத்தில் சேர்த்திருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

பிகாரில் இரயில் போக்குவரத்து

நிலை நிற்கிறது

தந்தி, டெலிபோன் கம்பிகள் துண்டிக்கப்படுகின்றன

பூர்னியா மாவட்டத்தில், கடந்த ஜனவரி 24-ந் தேதி முதல், 'பீகார் தனி மாநிலமாகவே இருக்கவேண்டும்' என்று கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இரயில்கள் போக்குவரத்தை இரண்டு நாட்களாகத் தடை செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

எந்த இரயிலையும் நகரவிடாது மாவட்டத்தில் ஆங்காங்கே நிறுத்தி வைத்திருப்பதாயும் தெரியவருகிறது.

மேலும், பூருலியா உட்பிரிவுப் பகுதியில் ஏராளமான தந்தி, டெலிபோன் கம்பிகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அலகாபாத்தில் பழங்காலச் சுரங்கம்

அலகாபாத், ஜன. 24—

முதல் இந்தியச் சுதந்திரப் போருக்குப் பின், இரகசிய தஸ்தாவேஜுக்களைப் பத்திரப்படுத்துவதற்கென கட்டப்பட்டதென நம்பப்படும் ஒரு சுரங்கம், இங்கு 'ரெவினியூ போர்டு' அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். அந்தக் கட்டிடத்திற்கான மராமத்து வேலை நடந்துகொண்டிருந்தபோது இது தெரிய வந்தது. சுரங்கத்தின் அகலம் 4 அடியும், உயரம் 2 அடியும் உள்ளது. அதன் உட்புறத்தில் நன்றாகப் பூச்சு வேலை செய்யப்பட்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

டெல்லித் தீர்ப்பை எதிர்த்து

நகர சபைத் தலைவர் பதவி விலகல்

மீரஜ், ஜன 24—

பம்பாய் நகரை மத்திய ஆட்சியின் கீழ் கொண்டுவரத் திட்டமிட்டிருப்பதை எதிர்த்து மீரஜ் நகர சபைத் தலைவரும், இன்னும் 17 உறுப்பினர்களும் தங்கள் பதவிகளை உதறித் தள்ளிவிட்டதாகத் தெரிய வருகிறது.

திண்டிவனம் வட்டத்தில்

பழுப்பு நிலக்கரி

தோழர் கோவிந்தசாமி கேள்விக்குப் பதில்

சென்னை, ஜன. 25—

'திண்டிவனம் தாலுகாவில் பழுப்பு நிலக்கரி கிடைப்பது சர்க்காருக்குத் தெரியுமா?' என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேள்வி ஒன்று கேட்டிருந்தார்

இதற்குப் பதிலளித்த மந்திரி பக்தவத்சலம், 'இந்திய சர்க்காரின் பூகர்ப்ப இலாகாவினர் இன்னும் அப்படிக் கண்டுபிடிக்கவில்லை; வானூர் பிக்காகெனிபட் கிராமத்தில் விவசாயி ஒருவர் கிணறு வெட்டும்போது, 50 அடி ஆழத்தில் பழுப்பு நிலக்கரி மாதிரி ஒரு பொருளைக் கண்டதும், அதன் பேரில, இந்திய பூகர்ப்ப அதிகாரிகளைப் பரிசோதனை நடத்துமாறு சென்னை சர்க்கார் கோரியிருக்கின்றனர். இன்னும் அந்த அதிகாரிகளிடமிருந்து மேலும் தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன,' என்று கூறியிருக்கிறார்.

பேரம் பேசவில்லையாம்

மறுக்கத் துணிகிறர் மந்திரி

சென்னை, ஜன. 25—

கூடலூர் தாலுகாவை சென்னையில் வைத்துக்கொள்வதற்காகத் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களைக் கேரளத்திற்குத் தந்துவிட சென்னை சர்க்கார் இணங்கினரா?' என்ற கேள்விக்கு, 'இல்லை' என்று பதில் தந்திருக்கிறார், மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில்.

'கூடலூர் கேரளத்திற்குச் சேர வேண்டும் என்று சென்னை சர்க்கார் கருதுவதானல், இந்திய சர்க்காருக்கு, கேரளத்துடன் கூடலூரைச் சேர்த்துவிடுமாறு சிபாரிசு செய்வார்களா?' என்று தோழர் கே. பி. கோபாலன் கேட்டபோது, மந்திரி சுப்பிரமணியம், 'இது, இந்த மாநில சர்க்காரை மட்டும் பொறுத்த விஷயமல்ல, மாறாக முடிவு செய்யும் பொறுப்பில் உள்ள இந்திய சர்க்காரைப் பொறுத்தது' என்று பதில் கூறியிருக்கிறார்.

மாநிலப் புது அமைப்புக் குழுவினரிடம் சர்க்கார்தந்த அறிக்கையை சபையில் தாக்கல் செய்யுமாறு கோரியதற்கு, 'முன்பே அது கூடாது—முடியாது,' என்று தாம் தெரிவித்துவிட்டதாக மந்திரி தெரிவித்திருக்கிறார்.

'செங்கோட்டையில் பாதியை, குழுவின்சிபாரிசுக்கு விரோதமாகக் கேரளத்துடன் இணைப்பதற்குச் சென்னை சர்க்கார் சம்மதம் தெரிவித்தனரா?' என்று கேட்கப்பட்டபோது, தனிக் கேள்வி எழுப்புமாறு மந்திரி கோரினராம்!

ஓட்டல் தொழிலாளருக்குத் தனிப் பாதுகாப்பு

ஓட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், உணவு விடுதிகள் இவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களை, தொழிற்சாலை—கடை சிப்பந்திகள் சட்ட வரம்பிலிருந்து நீக்கி, வேறு பாதுகாப்பளித்து தனிச் சட்டம் கொண்டு வர எண்ணியிருப்பதாக சட்டசபையில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சட்டம் வந்தால் இப்போதுள்ள குறைபாடுகள் நீங்கி நிலை தெளிவாகிவிடும் என்றும் அவர் கூறினராம்.

சர்க்கரைத் தொழில்: சில தகவல்கள்

இந்தியாவில் ஜவுளித் தொழிலுக்கு அடுத்தபடியாக, மிகப் பெரிய தொழிலாக விளங்குவது சர்க்கரைத் தொழில்தான். சுமார் இரண்டு கோடி விவசாயிகள் கரும்புச் சாகுபடியில் ஈடுபட்டிருக்கின்றனர்; சுமார் 40 இலட்சம் ஏகா நிலத்தில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இது உலகம்;முழுவதிலும் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வரும் மொத்த நிலப்பரப்பில 35 சதவிகிதமாகும்.

இந்தியாவில் ஏக்கர் விகித கரும்பு விளைச்சல 14 அல்லது 15 டன்; ஆனல் மற்ற நாடுகளிலோ இதைவிட அதிகமாக விளைகிறது; உதாரணமாக ஹாவாயில் 62 டன்னும், இந்தோனேஷியாவில் 56 டன்னும கிடைக்கிறது.

1954—55-ம் ஆண்டுப் பருவத்தில் இந்தியாவில் மொத்தம் 546 இலட்சம் டன் கரும்பு உற்பத்தியாயிற்று. 1952—53-ம் ஆண்டு உற்பத்தி 438 இலட்சம் டன்; 1952—53-ம் ஆண்டு உற்பத்தி 502 இலட்சம் டன்.

இந்தியாவில் கரும்பு சாகுபடியும், சர்க்கரை உற்பத்தியும் பெரிய அளவில் நடைபெற்றுவரும் மாநிலங்கள் உத்தரப் பிரதேசம், பீகார், பஞ்சாப், பம்பாய் ஆந்திரா, சென்னை ஆகியவை மொத்த உற்பத்தியில சுமார் 70 சதவிகிதமும, உத்தரப் பிரதேசம், பீகார ஆகிய மாநிலங்களிலேயே கிடைத்து வருகிறது. மொத்த உற்பத்தியில சுமார் 55 சதவிகிதம் வெல்லம், வெல்லச் சர்க்கரை ஆகியவை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது; 25 சதவிகிதம தான் வெள்ளைச் சர்க்கரை உற்பத்திக்காக ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

இந்தியாவில் தற்போது மொத்தம 161 சர்க்கரை ஆலைகள் உள்ளன; இவை தினமும் சராசரி 1,37,000 டன் கரும்பை உபயோகிக்க வல்லவை.

இந்தியாவில் சென்ற ஆண்டில் (1954—55) மொத்தம் 15.90 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாயிற்று; இதற்கு முன் எந்த ஆண்டிலும் இவ்வளவு சர்க்கரை இந்தியாவில உற்பத்தியானதில்லை. இதற்கு உபயோகிக்கப்பட்ட கரும்பின் அளவு 159.4 இலட்சம் டன; கரும்பின் பெறுமானம் சுமார் ரூ. 64 கோடி. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில, நாட்டில் வெள்ளைச் சர்க்கரை உபயோகம் ஆண்டுக்கு 22.5 இலட்சம் டன் வீதம் இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. இதுவே 1960—61-ம ஆண்டுக்குள்ளாக எட்டவேண்டிய உற்பத்தி இலட்சிய அளவாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளில் சர்க்கரை மீது 'எக்சைஸ் வரி' மூலம் மாநில சர்க்கார்களுக்கு ரூ. 122 கோடியும், கரும்புத் தீர்வை மூலம் மாநில சர்க்கார்களுக்கு ரூ 52 கோடியும் கிடைத்திருக்கிறது

1954-ம் ஆண்டில் 'மொலாசெச்'லிருந்து 80 இலட்சம் காலன் 'பவர் ஆல்கஹால்' உற்பத்தி செய்யப்பட்டது. 1955-ல் சுமார் ஒரு கோடி காலன் உற்பத்தி செய்யப்பட்டிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்பகுதி இரயில்வே யூனியன் அமைப்பு

எஸ். ஆர். எம். யூ. பொதுக் குழு முடிவு: நிர்வாகிகள் தேர்வு

22—1—56 காலை 10 மணியளவில் தஞ்சை தொண்டிராஜா பாளையம் தண்ணீர்ப் பந்தல் கட்டிடத்தில், தோழர் எஸ். இராகவானந்தம் தலைமையில் நடைபெற்ற எஸ். ஆர் எம். யூ. பொதுக் குழுக் கூட்டத்தில், கீழ்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'இரயில்வே தொழிலாளர்களின் உரிமைப் பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் அமைக்கப்பட்டுப் பணியாற்றி வந்துள்ள பல்வேறு யூனியன்கள் அரசியல் கட்சிகளின் சதுரங்கக் காய்களாகி, பாட்டாளிகளின் பாதுகாவலனாக நிற்கும் தன்மையைப் பாழடித்துக் கொண்டன. 'பொருளாதாரத் துறையில் மட்டும் உரிமையும் சலுகையும் பெற்றுப் பாட்டாளிகளுக்கு அளித்து விட்டால போதும்; சமூகத் துறையிலும், அறிவுத் துறையிலும் பாட்டாளி மக்கள் எத்தகைய இழிநிலையிலிருந்தாலும் பரவாயில்லை' — என்ற போக்கிலே அவைகள் இயங்கி வருகின்றன இக்காரணங்களால் பாட்டாளித் தோழர்கள் முற்போக்குத் துறையினராக முடியாமல் சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டே போயினர் என்வே அவர் தம் சமூக, அறிவுத் துறைகளைக் கவனித்துப் பணியாற்றுவதுதான் தொழிலாளர்களின் நிலையை உள்ளபடி உயர்த்தி சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு உன்னதமான இடம் கிடைத்திடச் செய்யும் என்ற நோக்குடன் திருச்சி பொன்மலையில் இக்கருத்துக் கொண்ட இரயில்வே தொழிலாளர்கள் கூடி, 10—9—52ல் 'தென்பகுதி இரயில்வேமென் யூனியன்' (எஸ். ஆர் எம். யூ.) என்ற அமைப்பைத் துவக்கினர். இந்த நோக்கத்தை ஆதரிக்கும் முற்போக்காளர்களின் ஒத்துழைப்பை—சிறப்பாகப் பெரியார் அவர்களின் ஆதரவினைப் பெற்று யூனியன் சிறப்புடன் வளர்ச்சியடைந்து வந்ததுடன், தொழிலாளர்களின் பிற அமைப்புக்களால் ஏமாற்றமடைந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் புதியதோர் நம்பிக்கை எழச் செய்து, தமிழகத்தில் மட்டும் 14 கிளைகளைக் கொண்டதாகவும் பல்வேறு கோரிக்கைகளை விளக்கிக் கொண்டும், அவற்றிற்காகப் போராடிக் கொண்டும் புதிய எழுச்சியை விளக்கும் வகையில் 25—9—53ல் சிறப்பான மாநாடு நடத்தி வெற்றியும் கண்டது. அதன் தலைவர் தோழர் இராகவானந்தம் ஏற்கனவே இந்தத் துறையில் ஈடுபட்டுப் பணியாற்றி, கஷ்ட நஷ்டமேற்று, சிறை சென்று தொழிலாளர்களின் நன்மதிப்பையும், பரிவையும் பெற்றவராதலாலும், அமைப்பின் பொதுச்செயலாளராகத் தோழர் வி. வீராசாமி, எம். பி. அவர்கள் பாட்டாளிகளுடன் பழகி அவர்தம் குறை போக்கப் பணியாற்றும் பண்பினராதலாலும் வேகமாக அது வளர்ச்சியடைந்து வந்தது. அப்படி இருக்கையில், தொழிலாளர்களின் அமைப்பு, அரசியல் கட்சிகளின் போக்கிற்கேற்ப தன் சுய உருவையும் உள்ளத்தையும் மாற்றிக்கொள்வது தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு உகந்ததாகாது என்ற உண்மையை உணர மறுப்பவர்களும், இத்தகைய அமைப்புகள், யாரேனும் ஒரு தலைவருக்கு வெண்சாமரம் வீசும் அளவிற்கு உருவடைந்தால் போதுமென எண்ணம் கொண்டவர்களும், பாட்டாளிகளின் பாசறையான யூனியன், ஜனநாயக முறையில் இயங்க வேண்டுமென்ற அடிப்படையை மறுப்பவர்களுமான ஒரு சில தோழர்கள், தமக்கு மாறுபாடான கருத்துகொண்டவர்களே பெருவாரியாக இருக்கிறார்கள் என்பதும் 14 கிளைகளில் 10 கிளைகள் இவர் தம் போக்கை மறுக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டும் இந்த அமைப்பைப் பெரியாருக்குக் காணிக்கையாக்கி யூனியனை திராவிடர் கழகத்திற்கு ஒரு பொக்கிஷமாக்கப் போகிறோம் என்று பேசியும், அதன்படி செயல்பட்டும் வரத் தொடங்கினர். பெரும்பான்மையினரைக் கலகம், குழப்பம் ஆகிய முறைகள் மூலம் கொடுமைப்படுத்தவும் இறங்கி தொழிலாளர் இயக்கத்திற்கு மாசு ஏற்படவும், கலாம் எழவுமான நிலையை மூட்டிவிடுவதென்று துணிந்து திட்டமிட்டனர். அத்திட்டப்படியே திருவாரூரிலும், தஞ்சையிலும் அடிதடி அளவிற்கு ஆபாசத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் போக்கிற்கு மேலும் இடமளிக்கும் விதத்தில் யூனியன், ஜனநாயக சட்டதிட்டப்படி யாருக்குச் சொந்தம் என்பதற்கான வழிவகை காணுவதில் ஈடுபடுகொண்டிருந்தால் தொழிலாளர் யூனியனுக்கான வளர்ச்சியைப் பாதிப்பதோடு, உண்மையில், தொழிலாளர்களுக்குப் பாடுபடும் வாய்ப்பும், நேரமும் பாழ்படுமென்று கருதித் தொழிலாளர் அமைப்பை அதன் தாய்மையை மறந்து ஒரு சேவை நிறுவனமாக மாற்ற விரும்பும் நண்பர்களின் கூட்டுறவிலிருந்து நீங்கி, எஸ். ஆர். எம் யூ. எந்தத் தூய்மையான நோக்கத்திற்காக ஏற்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறத்தக்க முறையில் இனி நாம்,

'S. R. U.' (தென் பகுதி இரயிலவே யூனியன்) என்ற பெயருடன் விளங்க வேண்டும் என்று விரும்புவதுடன், தொழிலாளர் நலன் கருதி இந்த முடிவிற்கு ஆதரவளிக்கும் வகையில் உடனடியாக 'எஸ். ஆர். எம். யூ.' என்ற பெயரில் இயங்கிக்கொண்டிருக்கும் கிளைகள் இந்தப் போக்கை ஆதரிக்கும் வகையில் உடனடியாக 'எஸ். ஆர். யூ.' என்ற பெயர் அழைத்துக்கொண்டு தொழிலாளர் இயக்கத்தைச் செவ்வனே நடத்துவதற்கான தூயபணிகளில் ஈடுபடக் கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்து கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

மத்திய சங்கத் தலைவர்: எஸ். இராகவானந்தம் (விழுப்புரம்)

துணைத் தலைவர்கள்: ஜி பராங்குசம் (பொன்மலை), எம் ஐசய்யா (பரிகலல்), எட்வர்ட் பொன்னையா (விருதுநகர்).

பொதுச்செயலாளர்: பொன். பரமசிவம் (திருச்சி).

துணைப்பொதுச்செயலாளர்கள்: இராஜரெத்தினம் (பெரம்பூர்), ஷம்சுதீன (பொன்மலை).

பொருளாளர்: ஏ. ஜீ. வெங்கடகிருஷ்ணன் (திருச்சி)

பொதுக்குழுக் கூட்டத்திற்கு, சென்னை எழும்பூர், செங்கல்பட்டு விழுப்புரம், திருவண்ணாமலை, கூடலூர், விருத்தாசலம், சேலம், லால்குடி, மாயவரம், திருவாரூர், தஞ்சை, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய கிளைகளிலிருந்து சுமார் 100 பிரதிநிதிகளும், விசேடப் பார்வையாளர்களாகப் பொன்மலை ஷம்சுதீன், லால்குடி சிவப்பிரகாசம், தஞ்சை டி. சே. சீனிவாசன் ஆகியோர் வந்திருந்தனர்.

* * *

விருத்தாசலம் கிளை யூனியன் நிர்வாகிகள் தேர்தல்

14—1—56 மாலை, தோழர் ஐசயா தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் கிளையின் நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பின்னர், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன், அம் மாவட்டங்களில் உள்ள இரயில்வே தொழிலாளர்களுக்கு சம்பளம் பிடித்தமில்லாமல் தகுந்த நஷ்டஈடு கொடுக்கும்படியாக நிர்வாகத்தைக் கேட்டுக்கொண்டும், மற்றும் ஒரு முக்கியத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

★

'தைப் பொங்கலன்று திராவிடர் திருநாள் கோண்டாடுவீர்' என்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தந்திருந்த அறிக்கைக்கு ஒப்ப, நாடெங்கும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் வெகு சிறப்பாக விழாக் கொண்டாடியிருக்கின்றனர்.

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கல், எளியோருக்கு உணவளித்தல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், சிறப்புக் கூட்டங்கள் கூட்டுதல், இசை அரங்கம்-நாடகம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் விழாககள் நடைபெற்ற விபரங்கள் இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளன :—

சென்னை:

5-வது வட்ட தி.மு. கழகம்

14—1—56 காலை 7 மணிக்கு கழக இல்லில், தோழர் கி. இராசேந்திரன் அவர்களால் கொடியேற்றுவிக்கப்பட்டு 100-க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

18-வது வட்ட தி. மு. க.

14—1—56 காலை 10 மணிக்கு, தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. புகழேந்தி, கே. சுப்பிரமணி, வி. செங்காத்ரன், ஆர். கே. மூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் மோ. பே. இமயவரம்பன் அவர்களால் இனிப்புப் பொங்கலும், பாலும் வழங்கப்பட்டது.

20-வது வட்ட தி. மு. க.

14—1—56 காலை 10 மணியளவில், கழக இல்லத்தில், தோழர் ச. மாணிக்கம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நன்மாறன், எல்லப்பன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. இடையில், சித்திரைத் திங்களை முதலாகக் கொண்டு தமிழர்களின் புத்தாண்டு அமைந்திருப்பது தவறு என்பது தமிழ்ப் பெரியார்களின் ஒருமித்த கருத்து அப் பொங்கற் புதுநாளை புத்தாண்டு எனக் கொண்டாடுவதால் தைத் திங்களையே முதலாகக்கொண்டு புத்தாண்டை நிர்ணயிக்கும்படி தமிழ்ப் பெரியார்களையும், ஆசிரியர்களையும், அரசியலாரையும், தமிழ் மக்களையும் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

40-வது வட்ட தி. மு. க.

14—1—56 காலை 9½ மணிக்கு, கழக இல்லத்தில் தோழர் கல்யாணி கழகக் கொடியை ஏற்றுவித்தார். விழா, தோழர் க. அப்பாதுரை தலைமையிலும், தோழியர் அலமேலு அப்பாதுரை முன்னிலையிலும் நடைபெற்றது. தோழர் ஆ வி. செகதீசன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

42-வது வட்ட தி. மு. க.

22—1—56 காலை 10 மணியளவில், கிளைக் கழகச் சார்பில் விழாக் கொண்டாடப்பட்டது அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. தோழர் நீல நாராயணன் வரவேற்புரையாற்றினார்; தோழர் சே. மு. காதர் கழகக் கொடியேற்றினார்; தோழர் கா வீரபாண்டியன் விழாவைத் துவக்கிவைத்தார். தோழர் பூ. அரங்கசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பொங்கல் விழா குறித்துச் சொற்பொழிவாற்றினர். விழாவில் மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதியும் கலந்து கொண்டார்.

43-வது வட்ட தி. மு. க.

14—1—56 காலையில் கிளைக் கழகப் பணிமனையில் கழகக் கொடியேற்றப்பட்டது. கழக உறுப்பினர்களுக்குத் தேநீர் விருந்தும் நடைபெற்றது. பகலில் 300-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

44-வது வட்ட தி. மு. க.

14—1—56 காலை 11½ மணியளவில் தோழர் ஏ. இராதாகிருஷ்ணன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் ஆர் அறிவழகன் கழகக் கொடியேற்றி வைத்தார். தோழர்கள் பலர் பொற்பொழிவாற்றினர். பகல் 12 மணிக்கு 300 ஏழைகளுக்கு மேல் உணவு அளிக்கப்பட்டது.

46-வது வட்ட தி. மு. க.

14—1—56 காலை 7 மணியளவில், தோழர் அ. பொ. அரசு கிளைக் கழக இல்லத்தில் கொடி ஏற்றிவைத்தார். தோழர் அ செல்வராசன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் அ. பொ. அரசு, பலராம், ஆர். எல். காதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், வட்ட மக்களுக்கும், ஏழை மக்களுக்குமாகச் சுமார் 200 பேர்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

சமூக நல மன்றம்

சென்னை நுங்கம்பாக்கம் சமூக நல மன்றச் சார்பில், சாந்திநிகேதன் பாடசாலையில் நடைபெற்றது. மாணவ மாணவியருக்கு திரு. கே. நாகபூஷணம் அவர்களால் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. மாலை 5 மணிக்கு திரு. வ சங்கர நாராயணன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. திரு. டி எம் தங்கவேலு வரவேற்புரையாற்றினர். தோழர்கள் எ. தங்கவேலு, டி. எஸ். கிள்ளிவளவன். ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அறிவியக்க மன்றம்

14—1—56 காலை 10½ மணிக்கு, சென்னை பூக்காகர், எலா கந்தப்பன் தெரு, எண். 33 இல்லத்தில், மன்றச் சார்பில், தோழர் கே. எம். மணி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பின்னர், சுமார் 100-க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும், தோழர்கட்கும், பொதுமக்களுக்கும் இனிப்பு வழங்கப்பெற்றது.

அறிவு வளர்ச்சி மன்றம்

14—1—56 காலை 9 மணிக்கு, தோழர் மு. கிருட்டிணசாமி தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஜி கிருஷ்ணன், எம். சி., அவர்கள், மன்ற நூலகப் பகுதிக்கு ரூ. 40 பெறுமானமுள்ள புத்தகங்களை அன்பளிப்பாக விழாவின்போது, மன்றச் செயலாளரிடம் அளித்தார். அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

தோழமைக் கழகம்

13—1—56 இரவு 7 மணிக்கு, சென்னை தோழமைக் கழகச் சார்பில் விழா நடைபெற்றது. மறுநாள் காலை 10 மணியளவில், கழகப் பணிமனையில், தோழர் எ. எஸ் இராமன் தலைமையில் பல தோழர்கள் பொங்கல் விழா குறித்துச் சொற்பொழிவாற்றினர். இறுதியில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

முத்தமிழ் கலை மன்றம்

14—1—56 காலை 11 மணிக்கு, சென்னை - இராயபுரம் கல்மண்டபம் வீதி, முத்தமிழ் கலை மன்றச் சார்பில் பொங்கல் விழாவும், மன்ற நூல் நிலையத் திறப்பு விழாவும் தோழர் க. கணேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். மாரிமுத்து வரவேற்புரையாற்றினர். தோழர் வி. சுந்தரமூர்த்தி, நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் பி. வி. முத்துசாமி, எஸ். ஜி. விசாபமூர்த்தி, என். ஆர். வீரஜின்னு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

சென்னை 3-வது வட்டத்தைச் சேர்ந்த வண்ணை, கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தில் கொண்டாடப்பட்டது. 14-1-56 காலை 10 மணிக்கு தோழர் செ. பாண்டியன் 300-க்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர்கட்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கினர்.

400 ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றினர்

வடசென்னை தி. பெ. சாலை தியாகராயர் கல்லூரி அருகில் எண். 130 இல்லத்தில், பல இயக்கத் தோழர்களின் முயற்சியாலும், பொதுமக்களின் உதவியாலும் 14—1—56 காலை 8 மணிக்கு, சுமார் 400-க்கு மேற்பட்ட ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றப்பட்டது. 11 மணிக்குச் சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

★

கோவை 28-வது வட்டம்

16—1—56 மாலை, 28-வது வட்டத்தில் தோழர் ரா. கிருட்டிணசாமி தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் கிருட்டிணசாமி, தி. திருமுருகு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், தோழர் முத்து அவர்களால்இசைவிருந்தளிக்கப்பட்டது. இறுதியில் அண்ணாவின் 'காதல் ஜோதி' நாடகம் நடைபெற்றது.

சமயநல்லூர்

15—1—56ல், இவ்வூரில் திராவிடர் திருநாள் நடைபெற்றது. காலையில் புதிய கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன பின்னர், போட்டி விளையாட்டுக்கள் நடைபெற்றன. மாலையில் பரிசளிப்பு விழா வாரண்மைக் கழகத் தலைவர் திரு. பூதன் தலைமையில் நடைபெற்றது.

சேலூர் (வ. ஆ. மா.)

14—1—56 காலை 8 மணிக்கு, கிளைக் கழக இடமாற்ற விழாவும், திராவிடர் திருநாள் விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கழக இல்லத்தில், தோழர் வி. சி. செயராமன் கொடி ஏற்றிவைத்தார். விழாவிற்குத் தோழர் கே. எம். சாரங்கபாணி தலைமை வகித்தார்.

கீழ்வழித்துணையாங்குப்பம்

17—1—56ல், கிளைக் கழகச் சார்பில், தோழர் வீரராகவலு தலைமையில் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சிற்றுனி-சுப்பிரமணியம், இளஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருப்பத்தூர் (வ. ஆ. மா.)

22—1—56 பகல் 1 மணிக்கு, சி. எம் எஸ். நினைவு மன்றச் சார்பில், மேற்படி மன்றத்தில் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது.

வேலூர்—வேலப்பாடி

16—1—56ல், கிளைக் கழகச் சார்பில், தோழர் பாலகிருஷ்ணன் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் சண்முகம், பாண்டியன், இளஞ்செழியன், சிற்றுனி-சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பகல் 2 மணிக்கு, தோழர் இளஞ்செழியன் தலைமையில் அண்ணா அவர்களது உருவப் படத்துடன் ஊர்வலம் நடைபெற்றது.

அம்பர்நாத் இயந்திரக்கருவி உற்பத்தித் தொழிற்சாலை

பிரிட்டிஷ் நிபுணர் தெரிவித்த ஊழல்கள் அம்பலம்

அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி வருத்தம்

புதுடெல்லி—

"அம்பர்நாத் இயந்திரக் கருவித் தொழிற்சாலையின் நிர்வாகம் குறித்து, ஸ்கேய்ப் என்ற பிரிட்டிஷ் நிபுணர் தந்த அறிக்கை இரகசியமானதாக வைத்திருக்கப்பட வேண்டிய தற்கு மாருக, கைத்தவருக வெளியிடப்பட்டு விட்டது," என்று, மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

"ஸ்கெல்ப் அவர்களின் திறனிலும், கண்ணியத்திலும் எனக்குப் பெருமதிப்பு உண்டு; அவர் ஒரு அரசியல் வாதி அல்ல; ஆனல், நல்லதோர் பிரிட்டிஷ் தொழில், பொறி நிபுணர். அவர் தம் கருத்தை பகிரங்கமாக அறிவித்திருந்தார். அது மந்திரி சபையின் சில பிரிவுகளில் உள்ளோரைப் புண்படுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது.

"என்னுடையவும், என்னுடைய மந்திரி சபை அதிகாரி ஒருவருடையவும் தவறினுல், ஸ்கெய்ப் அவர்களுக்கு ஒரு பாதகமான சூழ்நிலை ஏற்பட்டு விட்டதற்காக நான் வருந்துவதுடன், அதற்காகப் பகிரங்கமாக மன்னிப்பும் கோருகிறேன்.

"எனக்கென ஸ்கெய்ப் தயாரித்து அனுப்பிய அறிக்கையை வெளியிட நான் ஒருபோதும் அனுமதித்திருக்கக் கூடாது,"

என்று, வர்த்தகத் தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி இங்கு தெரிவித்திருக்கிறார்.

'ஊழல் நிலவுவது உண்மையே'

ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனமும் கூறுகிறது

(சர்க்கார்) பொதுத் துறையிலுள்ள இயந்திரக் கருவி உற்பத்தித் தொழில் பற்றி பிரிட்டிஷ் நிபுணரான ஸ்கெய்ப் கூறியுள்ள கருத்துக்களை, பிரபல எஞ்சினீயர்களான ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தினர் ஆதரித்திருக்கின்றனர்.

எஞ்சினீயரிங் சர்வே குழுவினருக்கு உதவி புரிவதற்காக வந்துள்ள ஸ்கெய்ப், குறிப்பாக அம்பர்நாத் தொழிற்சாலை பற்றியும், பொதுவாக இயந்திரக் கருவி உற்பத்தித் தொழிலில் நிலவும் ஊழல் குறித்தும் அறிவித்த கருத்துக்களைக் கண்டு பாதுகாப்பு மந்திரி சீற்றம் கொண்டுள்ளாராம்!

ர்வத்தகத் தொழில் மந்திரி கிருஷ்ணமாச்சாரியோ, ஸ்கெய்பின் சாதனைகளைப் பாராட்டியிருக்கிறார்.

"அந்த இயந்திரக் கருவி உற்பத்தித் தொழிற்சாலை சரியாகத் திட்டமிட்டுத் துவக்கப்படவில்லை; சரியாகவும் உபயோகிக்கப்படவுமில்லை."

என்று, ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தினர் கூறியிருக்கின்றனர்.

தேவிகுளம்—பீர்மேடு

தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டத்தின் மறுநாளான 30—1—56 திங்கள் மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தி. மு. கழகப் பொதுக குழு முடிவுகளை விளக்கிப் பொதுச் செயலாளர் அவர்கள் பேசுவார்.

கொரட்டி பிர்க்கா விவசாயிகள் சங்கம்

29—1—56 பகல் 2 மணிக்கு கொரட்டி பிர்க்கா விவசாயிகள் சங்க அமைப்புக் கூட்டம் சித்தேரி கிராமத்தில் நடைபெறும்.

எவ்வளவு தெரியுமா?

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையைப் பெருகுவதற்காகவும், கல்வி முறையைச் சீரமைப்பதற்காகவும், இந்திய சர்க்கார், பல்வேறு மாநிலங்களுக்கு மொத்தம் ரூ 179 கோடி வழங்கியது.

காங்கிரஸ் மாநாட்டிற்குப் போட்டியாக அகாலி தள மாநாடு

மாஸ்டர் தாராசிங் துணிவு

அமிர்தசரஸ் என்ற பஞ்சாப் மாநிலத் தலைநகரில், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் 62-வது மாநாடு நடைபெறும்போது அதே நாட்களில், அதே நகரில், அகாலிதளத்தவர் தங்களது இயக்கத்தின் மாநாடு ஒன்றையும் கூட்டவிருக்கின்றனர்.

காங்கிரசிற்கும் — அகாலிதளத்திற்குமிடையே நடைபெறும் பலப் பரீட்சையாகவே இந்தப் 'போட்டி மாநாடு' கூட்டப்படுவதாகச் சிலர் கூறுகின்றனர்.

பஞ்சாபி மொழிவழி மாநிலம் கோரி மாபெரும் போராட்டங்களை நடத்திய அகாலி தளத்தவர் கூட்டும் இந்த மாநாடு 'பெரிய மனிதர்'கள் பங்குபெறும் காங்கிரஸ் மாநாட்டிலும் சிறப்பாக நடைபெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தெரிவித்திருக்கின்றனர், சிலர்!

சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாராசிங், அகாலிதள மாநாட்டினை வெகு சிறப்பாக நடத்தப் பலமான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஒரே நாளில்—ஒரே நகரில் அகாலி தள மாநாடு என்றதும், காங்கிரஸ் மாநாட்டு வட்டாரங்கள் திடுக்கிட்டுப் போயிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பனம்பள்ளி மந்திரி சபை வீழும்?

தி. த. நா. காங்கிரஸ் ஆதரவைத் திரும்பப் பெறும்!

திருவனந்தபுரம் ஜன. 27—

இன்று எர்ணுகுளத்தில் திரு-கொச்சி பிரதேசக் காங்கிரஸ், மற்றும் திரு-தமிழக காங்கிரஸ் கட்சிகளின் கூட்டுக் கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நிற்பது என்று, திரு-தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினர் இரு தினங்களுக்கு முன் முடிவெடுத்திருக்கின்றனர்.

திரு-கொச்சி தமிழ் வட்டங்களின் எதிர்காலம் குறித்து டில்லி சர்க்காரின் முடிவுகளை ஆலோசிப்பதற்காகத் தி. த. நா. காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் தி. த. நா. காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோரடங்கிய கூட்டுக் கூட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

வளரும் அரசியல் நிலைகளுக்கொப்ப, பனம்பள்ளி மந்திரி சபையைத் தொடர்ந்து ஆதரிப்பது, தி. த. நா. காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகுவது முதலிய சிக்கல்கள் கவனிக்கப்பட வேண்டும் என்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

118 பேர் கொண்ட திரு-கொச்சி சட்டசபையில் 12 தி. த. நா. காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட 60 பேர்கள்தான் பனம்பள்ளியை ஆதரிக்கும் காங்கிரஸ்காரர்கள்.

மேலும், தி. த. நா. காங்கிரசார், 'டில்லி முடிவு அநீதியானது; ஜனநாயக விரோதமானது' என்று கண்டித்திருப்பதுடன், 'சென்னை சர்க்கார், சென்னை சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்தையேனும் காப்பாற்றத் தமிழக மக்களுடன் ஒத்துழைக்கவேண்டும்' என்றும் கோரி தீர்மானம் ஒன்று நிறைவேற்றினர்.

கழகக் கூட்டம்

★

பாப்பாரப்பட்டி

காந்தி மைதானத்தில்

30—1—56 மாலை 6½ மணிக்கு

தலைவர் : உ. வ. சண்முகம்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

ப. உ. சண்முகம்

மாபெரும் பொதுக்கூட்டம்

29—1—56 ஞாயிறு மாலை 6 மணிக்கு

சிதம்பரம் நகர மண்டப மைதானத்தில்

தில்லை-வில்லாளன்

தலைமையில் நடைபெறும்

★

அண்ணா,

பொதுச்செயலாளர் **இரா. நெடுஞ்செழியன்,**

துணைப் பொதுச்செயலாளர் **என். வி. நடராசன்**

மற்றும்

பொதுக்குழு உறுப்பினர் பலரும் கலந்துகொள்ளுவர்

அப்பளத் திட்டம்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

லாக தீக்குச்சித் தொழில் இருப்பதுபோன்றே இந்த அப்பளத் தொழிலும் அரசாங்கத்தால் கருதப்படுகிறது.

சுகாதார முறையில் சேர்க்கப்படவேண்டிய பொருட்கள் அனைத்தையும் கலந்து இடித்த உளுத்த மாவை, மேற்படி தொழில் நிலையத்தில் ஊழியர்கள், தொழிலை மேற்கோள்ள விழையும் பெண்களிடம், அவரவர்கள் இருக்கும் இடங்களிலேயே கோண்டு தருவார்களாம்!

குறிப்பிட்ட இடத்தில் வந்து ஒன்றுகப் பெண்கள் அப்பளம் உருட்டுவதற்கும் ஏற்பாடு இருக்கிறதாம்!

நூற்றுக்குக் கூலி அணு பன்னிரெண்டாம்!

ஐந்து மணி நேரத்தில் ஒரு பெண்ணல் 150 அப்பளம் வரை தயாரிக்க முடியுமாம்!

உருவாக்கப்படும் அப்பளங்கள், வீட்டுக்கு வீடு விநியோகிக்கவும்படுமாம்.

வடநாடுகளில் நமது அப்பளம் கிராக்கியாக விற்பனையாகும் என அரசாங்கம் நம்பவும் செய்கிறது!

இது போதாதா? தென்னுட்டிற்கு இதற்கு மேலுமா தொழில் திட்டம் வேண்டும்? 'தொழில் துறையில் தென்னுடு புறக்கணிக்கப்படுகிறது' என 'வீண்' புகார் கூறிக்கொண்டிருக்கிறவர்களின் வாய், இனி கண்டிப்பாக அடைந்து போய்விடும் என்பதில் சந்தேகமே இல்லை! எள்ளத்தனை சந்தேகமும் இல்லை!

திராவிடர் திருநாள்

★

போளூர்

பழைய பஸ் நிலையம்

(அழகிரி பந்தல்-சுந்தரம் அரங்கில்)

30—1—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : கன்னையன்

பேசுவோர்:

என். வி. நடராசன்

கே. ஏ. மதியழகன்

குறிப்பு : பிற்பகல் 2 மணிக்கு மாபெரும் ஊர்வலம் நடைபெறும். மேடைக்குப் பக்கத்தில் தி. மு. கழக உறுப்பினர்கள் பதிவும் நடைபெறும்.

சென்னை-தூளை நகர இளைஞர் கழகம்

28—1—56 மாலை 6 மணிக்கு, மேற்படி கழகத்தின் 23-வது ஆண்டு விழா, சென்னை தூளை மாணிக்கச் செட்டித்தெருவிலுள்ள கழக மனையில் திரு. என். கோபால மேனன் (சென்னை சட்டசபை சபாநாயகர்) தலைமையில் நடைபெறும். பேராசிரியர் திரு வி. சண்முகசுந்தரம், திரு. கொ. மோ. செனர்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

'திருக்குறள்' சொற்பொழிவு

30—1—56 மாலை 6 மணிக்கு நாமக்கல் திரு. வி. க. பாறையில், திருவள்ளுவர் கழகச் சார்பில், தோழர் வி. ஆர். முத்துசாமி தலைமையில் நடைபெறும் தோழர் வி. முனுசாமி எம். பி. 'திருக்குறள்' பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

கிராண்ட்பாஸ் (இலங்கை) தி. மு. கழகக் கிளை 3-வது ஆண்டு விழா

29—1—56 பிற்பகல் 3 மணி முதல் 7 மணி வரை தோழர் ஆர். ஆர். கே. டேலர் தலைமையில், கொழும்பு கிராண்ட்பாஸ் கிளைக் கழகத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவு விழா, கொழும்பு நாராயண குரு மண்டப அழகிரி அரங்கில் நடைபெறும். தோழர்கள் இரா. அதிமணி, டி. எம். பீர்முகமது, தலுவத்தை (சிங்களத் தோழர்) மூ வெ. பெ. சாமி, பி. எம். ஜலால் ஆகியோர் சொற்பொழிவாற்றுவா.

திராவிட மாணவர் முன்னேற்ற கழக அமைப்புக் குழு

ஜன. 28-ந் தேதி

அண்ணாமலை நகரில்

நடைபெறும்

★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தையடுத்த அண்ணாமலை நகரிலுள்ள மணியகாரர் தோப்பு அண்ணா அகத்தில், 28—1—56 சனிக்கிழமையன்று மாலை 3-மணிக்கு நடைபெறும்.

சிறப்பு அழைப்பின்பேரில் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கலந்துகொள்ளுகிறார்கள்.

அமைப்புக் குழு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக எதிர்கால வளர்ச்சிபற்றிய பல பிரச்சினைகள் குறித்து விவாதித்து முடிவு செய்ய இருக்கிறது.

'அறிவகம்'
இராயபுரம்,
சென்னை-13

டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ